உ
சிவமயம்



யாழ்ப்பாணம், தென்மராட்சி, மீசாலை மேற்கு

அமரர் அருணாசலம் அவர்களின் பத்தினி

திருமதி.சின்னப்பிள்ளை அருணாசலம்

அவர்களின் சிவபதம் குறித்த

# நினைவஞ்சலிப் பேரிதழ்

2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்



கூட்டிப் பெருக்கி குழை, இலை, தழை பொறுக்கி
கோயில் போல் இல்லத்தை குளிர்வித்தாய்
கொப்பாட்டர் வந்தும் கூனல் அறியாமல்
மெத்த மிகு சுவையாய் உணவும் உரிமையும்
வைராக்கியம் படைத்த வாழ்வும் வாழ்ந்ததனை
எப்படி மறந்திடுவோம் இது காணிக்கை ஆச்சி.

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

அமரர் - திருமதி

# சின்னப்பிள்ளை அருணாசலம்

மண்ணிற் காளாகி 17 12 1921



விண்ணிற் காளாகி 25 07 2005

## திதி நிர்ணயம்

பார்த்திப ஆண்டாடி மாதம் அபரபக்கம்
சேர்த்து வரும்பஞ் சமித்திதியில் - கீர்த்திபெறு
சின்னப்பிள் ளையென்னும் சீரியாள் சென்றடைந்தாள்
வன்னச் சிவபெருமான் தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேறறுக்கவல்லான் - நாயகனே
வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந்தன்மையினால்
கண்ணிற் பணியின் கனிந்து.

## தேவாரம்

கருவுற்ற காலத்தே யென்னை ஆண்டு
களற் போது தத்தளித்த கள்வர் போலும்
செருவிற் புரமூன்றும் அட்டார் போலும்
தேவர்க்குந் தேவராஞ் செல்வர் போலும்
மருவிப் பிரியாத மைந்தர் போலும்
மலரடிகள் நாடி வணங்கலுற்ற
இருவர்க் கொருவராய் நின்றார் போலும்
இன்னம் பர்த் தான்தோன்றி யீசனாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

புற்றில்வா ளரவும் அஞ்சேன்
பொய்யர் தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடை எம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றும் ஓர் தெய்வந் தன்னை
உண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலாத வரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே.

## திருவிசைப்பா

தாயில் நேர் இரங்கும் தலைவ ஓ என்றும்
தமியனேன் துணைவ ஓ என்றும்
தாயினான் இருந்து புலம்பினால் இரங்கு
நலம்புரி மாதங் கோயில்
வாயின் நேர் அரும்பு மணி முருக்கவர்
வணிளஞ் சோலை மாந்தளிர் செந்
தியின்றோ அரும்பு பெரும் பற்றப் புலியூர்
திருவளர் சிற்றம்பலமே

## திருப்பல்லாண்டு

எந்தை எந்தாய் சுற்றம் முற்றும் எமக்கமு
தாமெம் பிரான் என்றென்று
சிந்தை செய்யும் சிவன் சீரடியார்
அடிநாய் செப்புரை
அந்தமில் ஆனந்தச் சேந்தன் எனைப்புகுந்
தாண்டு கொண் டாருயிர் மேற்
பந்தம் பிரியப் பிரிந்தவ னேஎன்று
பல்லாண்டு கூறுதுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

சொல்லுவது அறியேன் வாழி
தோற்றிய தோற்றம் போற்றி
வல்லைவந்து அருளி என்னை
வழிக் கொண்டு கொண்டாய் போற்றி
எல்லையில் இன்ப வெள்ளம்
எனக்கருள் செய்தாய் போற்றி
தில்லை அம்பலத்துள் ஆடும்
சேவடி போற்றி என்ன

## திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித்திரு நகை
அத்திக்கிறை சந்திச் சரவண
முத்துக்கொரு வித்துக் குருபர வெனவோதும்
முக்கட்பரமற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித்திரு வரு
முப்பத்மு வர்க் கத்தமரு மடிபேணப்
பத்துத்தலை தக்தக்கணை தொடு
மொற்றைக்கிரி மற்றைப் பொழுதொரு
பட்டப்பகல் வட்டத்திகிரியி விரைவாக
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புவன் மெச்சித்தரு பொருள்
பட்சத்துடன் ரட்சித்தருளுவ தொருநாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தித்தித்திசை யொக்கப்பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப்பயிரவி
திக்கொக்கா டிக்கழுகொடு கழுகாடத்
திக்குப்பரி வட்டக்கலைகொடு
சித்தாப்பவுரிக்குத்திகுதிகு
திக்குத்திரு திக்குத்திரிகட வெனவோதும்
கொத்துப்பறை கொட்டக்கமிசை
குக்குக்குகு குக்குக்குகுகுகு
குத்திப்புதை புக்குப்பிடியென முதுகூகை
கொட்புற்றெழு நட்பற்றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக்குலகிரி
குத்துப்பட வொற்றிப் பொரவல பெருமாளே.

## திருப்புராணம்

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னை நினைக்கையிலே....

தெருக் கூட்டி மணல் பரவி
தினந்தோறும் கதை பேசி
வாற மனிச ரெல்லாம்
வெத்திலை சப்ப வேணும்
தட்டம் எடுத்து வைத்தாய்
செத்தால் வேண்டு மென்றாய்
கொண்டு போனார்களோ
கொள்ளையரோ யாமறியோம்
வீடு வேலி அடைக்க வேணும்
நாலு மனிசர் வாற இடம்
ஓயாமல் சொன்ன இவை
ஊராரும் மறக்கார்கள்

இடப் பெயர்வு வந்தாலும்
ஏதொன்றும் மாறவில்லை
வைத்த பொருள் வைத்த இடம்
செல்லி நிற்கும் வைராக்கியம்
கண் பார்வை குன்றவில்லை.
செவி கூர்மை குறையவில்லை.
ஒன்றும் வேண்டாமென்று
ஒருமாதம் படுத்திட்டாய்
கோதானம் தந்து நின்றோம்
குறை யொன்றும் அறிய நாம்
ஆதி அந்தம் இல்லாதான்
அடியிணையே சேர்ந்திடுக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சாந்தி வேண்டும் பாடல்

கற்பகக் களிறே கயமுகனை ஒழித்தேவனே
நர்த்தனம் ஆடிடும் நர்த்தன கணபதியே
வெற்றிதரு வேம்பிராய் கலட்டி விநாயகனே
உற்ற சின்னப் பிள்ளைக்கு உயர்சாந்தி தந்திடுவாய்

எழில் மேவு இலந்தைக் கூடலிலே முருகா
அழகொழுக ஆடீவரும் அற்புதம் அதிசயமும்
முறுவலொடு நீபுரியும் முறையன்றோ குமரா
அறவினைகள் கெட ஆத்மசாந்தி தந்திடுவாய்.

பொங்கலுடன் மடைபூசை அன்னதானம் என்று
புகழ்மேவு மீசாலைக் குடியிடையே அமர்ந்து
எங்களது துயர்தீர்க்கும் காளிஆச்சி அம்மா
பங்கமிலா ஆத்மசாந்தி சின்னப் பிள்ளைக்கருள்வாய்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரார்த்த தீபிகையிலிருந்து

சிரத்தையுடன் செய்யப்பட வேண்டியகாரியங்கள் சிரார்த்தக் காரியங்கள். இற்றைக் காலச் சூழ் நிலையில் (சமய நம்பிக்கை குறைந்த) இக் காரியங்களைச் சரியான முறையில் கைக் கொள்ளாமையினால் பிதிர் சாபங்களையும், தோஷங்களையும், குடும்பத்தினர் தெரிந்தோ தெரியாமலோ ஏற்றுத் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர்.

சிவமயம்

# சிராத்த தீபிகை

## தீக்ஷை

ஆசாரியரிடம் தீக்ஷைபெற்றுத் தங்கள் தங்கள் அதிகாரத்துக்குத் தக்கவாறு குருவாலே போதிக்கப்பட்ட சைவாசாரங்களை வழுவாது அநுட்டித்த மாணாக்கர்கள் போகத்தையும் மோஷத்தையும் அடைவார்கள்.

### சைவசமயநெறி

*சரித்தார்க்குச் சைவ சமய நெறியி*

*னுரித்தாங்கு புத்திமுத்தி யும்.*

தீ - ஞானத்தைக் கொடுப்பது. ஷ - பாசத்தை யறுப்பது; எனவே பாசத்தை யறுத்து ஞாபகத்தைக் கொடுப்பது தீக்ஷையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசாரத்தில் வழுவியவர்கள்.

சைவாசாரங்களை அநுட்டியாதவர்கள் புத்தி தத்துவத்திலேயுள்ள பைசாசபுவனத்திலே பிசாசுகளாய் அங்குள்ள போகங்களை நூறு இருடிவருடம் வரையும் புசிப்பார்கள்.

*இந்தநெறி தன்னி லியங்கார் பிசாசாவ*
*ரந்தவினை போம்பரிகா ரத்து.*

தீக்ஷை பெற்றபின் ஆசாரத்திலேவழுவிய பாவங்களுள் புத்திபூருவமாகச் செய்தபாவம் பிராயச்சித்தத்தினால் நீங்கும். புத்திபூருவமாகச் செய்த பாவம் அந்தியேஷ்டி, பாஷாணத் தாபனம், உதகதானம் (தருப்பணம்), பிண்டதானம், அத்தி சஞ்சயனம், நக்கினப்பிரச்சாதனம், ஏகோத்தரவிருத்தி, நவச்சிராத்தம், சங்கிதாசிராத்தம், இடப உத்சர்ச்சனம், ஏகோத் திட்டம், பஞ்சதசசிராத்தம், சோதகும்பசிராத்தம், சபிண்டீ கரணம் என்னும் இக்கிரியைகளாலே நீங்கும். இக்கிரியைகள் செய்யாவிடத்து அப்பாவங்கள் புசித்தே தீரவேண்டும்.

சமயாசாரத்தில் வாஞ்சையுற்றும் பற்றற்றுமிருக்கும் நைட்டிகனும் சந்நியாசியும் சமயாசாரத்திலே சிவலோபம் வரின், அநதியத்திற் பஞ்சாஷரத்திலே பதினாயிரம் உருச் செபிக்க வேண்டும். அன்றேல் ஒரு சிவஞானிக்குப் பூசை செய்யவேண்டும்.

## கோதானாதி

இறக்கப்போகின்றவர் மரணசமயத்திலே தாம் செய்த பாவங்கணீங்கிச் பேறெய்தவேண்டிக் கோதானம் முதலியவற்றைப் பிராமணரை வரித்துச் செய்க. அல்லது இறக்கப் போகின்றவரைக் குறித்து அவர் புத்திரர் முதலாயினோருஞ் செய்யலாமென நூல்கள் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி.

அந்தியேட்டி என்பது கடைசியிற் செய்யும் யாகம் எனப்பொருள்படும் இஷ்டி - யாகம். சைவர்கள் இறந்தவழி அந்தியேஷ்டி செய்வித்துச், சிவரூபமான அவர் தேகத்தைச் சிவாக்கினியிற் சேர்த்தலாகிய சம்ஸ்காரஞ் செய்க. அந்தியேட்டி செய்யின் சமயாசாரத்தில் வழுவிய குற்றந்தீரு முகத்தால் சிவத்துவ சித்தியுண்டாகும். ஆசாரமற்றவர்கள் இறந்தவழி, சிவாக்கினியினால் மந்திரமின்றி, அவர் தேகத்தைத் தகனஞ் செய்து ஆசௌசாந்தத்தில் அந்தியேஷ்டி செய்து மற்றைய கிரியைகளையுஞ் செய்தல் முறையாம்.

## தகனாதிகளுக்கு அதிகாரிகள்.

தகனமுதலிய கிரியைகளுக்கு அதிகாரிகள் இருபதின்மராவார்- (1) புத்திரன், (2) மனைவி, (3) மகள், (4) தமையன், (5) இளைய சகோதரன், (6) சகோதரன் புதல்வன், (7) பிதா,(8) தாய், (9) மருமகள், (10) சகோதரி, (11) சகோதரி புதல்வன், (12) பிதிர்வழிச் சபிண்டன், (13) சமானோதகன், (14) தாய்வழிச் சபிண்டன், (15) தாயின் சமானோதகன், (16) சீடன், (17) குரு, (18) மகள் கணவன், (19) தோழன், (20) அரசன் என்பவர்கள். இவர்களுள் புத்திரனே பிரதான கருத்தா ஆவன். ஏனையோர் இரண்டாம் பிரதானமாவர். பிரதானகருத்தா இல்லையாயின் அடுத்தவர் வரிசையாகப் பிரதானமாவர். பிரதானனிருந்தால் அடுத்தவருக்கதிகாரமில்லை. மகன், சகோதரன், அவன்மகன் முதலியோர் முறையே அதிகாரிகள் எனவும் நுல்கள் கூறுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் கருத்தாவாகிய புத்திரனுக்குச் சம்ஸ்காரம் வரையினது; சஞ்சயனம் வரையினது; சபிண்டீகரணம் வரையினது என ஐவகைச் சுத்திகளுளவாம்.

இனி, "செனனத்தின் முன் மரணத்தில் புதைத்தலே சம்ஸ்காரமாம். அப்பால் ஐந்தாம் வயசுவரையினதாகிய மரணத்தில் பிண்டதானம் வரையினதாம்; அப்பால் எட்டாம் வயசு வரையாய மரணத்தில் அத்திசஞ்சயனம் வரையினதாம். அப்பால் பன்னிரண்டாம் வயசு வரையாய மரணத்தில் ஏகோத்திட்டம் வரையினதாம்; அப்பால் மரணத்தில் சபிண்டீகரணம் வரையினதாம்" என்று சைவா சௌசதீபிகை செப்புகின்றது.

தகனமுதலிய கிரியைகளைச் செய்வதற்குத் தீக்ஷையுடையோரே அதிகாரிகளாவர். காலோத்தரத்திலே "தீக்ஷையினால் மெய்ப்பொருளைக் கேட்க அதிகாரியாவான்; பூசையில் அதிகாரியாவன்: தீக்ஷையாற்றானே ஆச்சிரம தருமங்கள் அமைகின்றன; தீசையால் ஞானமுண்டாம்; தீசையாற் சுத்தரானவர்களே பிரேதக்கிரியையில் அதிகாரிகள்" என்று கூறப்பட்டது.

பிரமச்சாரியானவன் தன் மாதா பிதா அல்லாதவருக்குத் தகனாதி கிரியைகளைச் செய்தல் கூடாது. செய்யின் மீட்டும் உபநயனம் செய்து கொள்ளக்கடவன். தத்தபுத்திரன் பார்வணம், மாசிகம், பிண்டதானம் இவைகளைச் செய்தலாகும். சிஷ்யர் தமக்கு உபதேசம் செய்த குரு சிவபதமடைந்த மாச நஷத்திரத்திலாயினும், திதியிலாயினும் அவரைக் குறித்து வருஷந்தோறுந் தவறாது குருபூசை செய்தல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்திசஞ்சயனம்.

முதலாம் மூன்றாம் ஐந்தாம் ஏழாம் ஒன்பதாம் நாட்களுள் ஒன்றனுள்ளே அஸ்திசஞ்சயனஞ் செய்க. அஸ்தியைப் புண்ணிய ஜலத்திலிடுக. அத்திசஞ்சயனம் - எலும்பு பொறுக்குதல்.

கபிலமுனிவருடைய விழித்தீயினால் சகரபுத்திரர் அறுபதினாயிரவர் பாதாளத்தில் உடம்பு சாம்பராய் நரகத்துன்ப மனுபவித்தனர். கங்கா தீர்த்தத்தை அவர்கள் எலும்பிற் பாயச்செய்து நற்கதியடைவிக்க விரும்பிய தம் வழித் தோன்றலான பகீரதமகாராசன் அநேக காலம் சிவபெருமானை நோந்கித் தவமியற்றினான். சிவபெருமனுடைய உத்தரவினால் பிரமலோகத்திலிருந்த கங்கை வேகமாய்ப் பாய்ந்து வந்தது. கடவுள் அதனைத் தமது திருமுடியிற்றாங்கிச் சிறுதுளியை விடுத்தனர். அது பாதாளத்திற் சென்று அவர்கள் எலும்பிற் பாய்ந்தது; அவ்விசேடத்தால் அவர்கள் நற்கதியடைந்தார்கள். இச் சரித்திரத்தால் அத்தியைப் புண்ணிய தீர்த்தத்திலிடுவதனால் ஆன்மா புண்ணிய உலகம் அடையுமென்பது நன்கு தேறப்படும். காசிகாண்டத்துக் கங்கையில் எலும்பு விழுந்த அத்தியாயமும் இதனை யுணர்த்தும்.

## நக்கினப் பிரச்சாதனம்

ஒரு குடத்தில் அரிசியை நிரப்பி அக்குடத்தைச் சுற்றி வஸ்திரம்கட்டி, வெண்கலப்பாத்திரத்தில் நெய்யையூற்றி, இல்வாழ்வானுக்குப் பரமசிவனைத் தியானம் பண்ணிக்கொண்டு, கொடுக்க. இது நக்கினப் பிரச்சாதனங் கொடுக்கும் முறை யாகும். காமிகாகமத்திலே "தீஷிதனாகிய இல்வாழ்வானுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கினப் பிரசாதனங் கொடுக்க. அது தகனமுடிவிலே இறந்தவனைச் சுட்டி வஸ்திரத்தோடும் அரிசியோடும் கொடுக்கற்பாலது" எனக் கூறப்பட்டிருக்கிறது. அது, ஆசௌச தீபிகையில்,

*"மொழியவரு நக்கினத்தை மூடவருஞ் சிராத்த*
*முந்துதக னாந்தத்தின் மரித்தவனைக் குறித்துப்*
*பழியினவ வத்திரமும் பச்சரிசி தானும்*
*பகர்ந்திடுநற் றக்கினையு முதலான பொருள்கள்*
*அழிவில்சிவ தீக்கையுள வில்வால்வான் கையிலழித்திடுக....."*

என்பதால் அறியப்படும்.

## பாஷாணத்தாபனம்.

அந்தியேஷ்டி முற்றியபின் பாஷாணத் தாபனஞ்செய்க. சாதகன் ஆசாரியனாமிவர்களுக்கு ஈசாதி நாமத்தாலும், சமயி புத்திரகனாமிவர்களுக்கு கந்தாதி நாமத்தாலும் மும்மூன்று தர்ப்பணஞ்செய்க. பிண்டப்பிரதானமும் ஏகோத்தர விருத்தியும் புரிக.

## ஏகோத்தரவிருத்தி.

முதல் நாளில் மூன்று தருப்பணமும், இரண்டாம்நாள் முதலாக ஆசௌசம் முடியுமளவும் தினம் ஒவ்வொன்று விருத்தியான தருப்பணமும் செய்க. ஏகோத்தரவிருத்தி தருப்பணம் பிராமணருக்கு எழுபத்தைந்தும், ஷத்திரியருக்கு நூற்றிரண்டும் வைசியருக் நூற்றைம்பதும், சூத்திரருக்கு ஜஞ்நூற்றிருபத் தைந்துமாம். தருப்பணத் தொகையினளவு ஏகோத்தரவிருத்தி சிராத்தம் அவ்வத்தினங்களிலே செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிண்டதானம்.


நான்கு வருணத்தாருக்கும் ஒவ்வொரு நாளுக்கு ஒவ்வொன்றாக ஆசௌசம் முடியுமளவும் இடுக. பிராமணர் பத்துப் பிண்டமும் ஷத்திரியர் பன்னிரண்டு பிண்டமும் ஷத்திரியர் பதினைந்து பிண்டமும் சூத்திரர் முப்பது பிண்டமும்மிடுக.

## நவச்சிராத்தம்.

முதலாநாள், மூன்றாநாள், ஐந்தாநாள், ஏழாநாள், ஒன்பதாநாள், பதினொராநாள் ஆகிய இந்நாட்களில் சற்பாத்திரரை வரித்துத் தூபம் தீபம் சந்தனம் முதலியவின்றிப் பொருள்களைக் கொடுப்பது நவச்சிராத்தமாம். நவம் - புதிது. எனவே முதலிற் செய்யும் சிராத்தமென்பது கருத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



## நன்மை கடலிற் பெரிது

எம்மை விட்டுப் பிரிந்து இறையடி எய்திய எங்கள் தெய்வத்தின் ஈமைக் கிரியைகளின் போது நேரில் கலந்து கொண்ட அனைவருக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பி வைத்தவர்களுக்கும், பலவிதமான உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், ஆத்மா சாந்திக் கிரியைகளில் பங்கு கொண்ட அனைவருக்கும் பணிவான நன்றி நவில்கின்றோம்.

*குடும்பத்தினர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சின்னப்பிள்ளையின் வம்சாவழி

| | | |
|---|---|---|
| தந்தை | - | வல்லிபுரம் |
| தாய் | - | சின்னம்மா |
| சகோதரர் | - | வேலுப்பிள்ளை |
| | | |
| கணவர் | - | அருணாசலம் |
| கணவரின் தந்தை | - | சின்னர் + சின்னம்மா |
| கணவரின் சகோதரர்கள் | - | சின்னத்தம்பி |
| | - | சதாசிவம் |
| | - | செல்லையா |
| பிள்ளைகள் | - | காசிப்பிள்ளை |
| | - | நல்லம்மா |
| | - | தம்பிராசா |
| | | |
| மருமக்கள் | - | சரவணமுத்து |
| | - | தம்பையா |
| | - | செல்லம்மா |
| | | |
| பேரப்பிள்ளைகள் | - | இராசலட்சுமி |
| | - | விநாயகமூர்த்தி + சாவித்திரி |
| | - | பரமநாதன் |
| | - | அன்னலட்சுமி |
| | - | புவனேஸ்வரி |
| | - | கணேசமூர்த்தி |
| | - | இதயகுமாரி |
| | - | கேதீஸ்வரி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரப்பிள்ளைகள் - சறோஜினிதேவி + கனகரத்தினம்
- வசந்தமலர் + வரதராசா
- தர்மபாலன் + இராஜபூபதி
- தர்மராசன் + கருணாவதி
- கருணாவதி + மயில்வாகனம்
- திலகவதி + ஏகாம்பரம்
- தர்மேந்திரன் + வசந்தினி (லண்டன்)
- நீலலோஜினி + தவராசா

பேரப்பிள்ளைகள் - அற்புதராணி + குணசிங்கம் (கனடா)
- மலர்விழி + தேவபரன் (கொழும்பு)
- மாலதி + நிமலகுமார் (கனடா)
- முகுந்தினி + வசந்தகுமார் (ஹொலண்ட்)
- முகுந்தன் (லண்டன்)

பீட்டப்பிள்ளைகள் - வினோதன்
- ஊர்மிளா+குணசேகரம்(சுவிஸ்)
- சர்மிளா + (சுவிஸ்)
- பிலோமினா
- விஜிதா

பீட்டப்பிள்ளைகள் - சாருணியா (கனடா)
- சரண்யா (கனடா)
- சாருஜன் (கனடா)
- தேவஎவறிஸ்ரன்
- ஜஸ்வினி (கனடா)
- நிசாந்த் (ஹொலண்ட்)

பீட்டப்பிள்ளைகள் - கௌரிசங்கர் (அமெரிக்கா)
- நர்மதா
- தர்மினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீட்டப்பிள்ளைகள் - துஷ்யந்தி
- பிரசாந்தி
- கிருசாந்தி
- தர்மசீலன் (லண்டன்)
- பிரியதர்சினி (லண்டன்)
- வேணுகோபன் (லண்டன்)
- அபிவர்ணா

பீட்டப்பிள்ளைகள் - ரகுனந்தன் (டோகா)
- நிமலராஜ் (டோகா)
- கேகயன்
- தேவகி
- வினோபா + சிவகீதன்
- குகாஜினி
- சுமித்திரா + பிரதீபன் (அமரர்)
- சதீஸ்குமார்
- அஜந்தன்
- பவித்திரா
- பகிர்தா


பீட்டப்பிள்ளைகள் - அகிலன்
- கல்பனா

பீட்டப்பிள்ளைகள் - கோடீஸ்வரன்
- கோகிலா
- கோணேஸ்வரன்
- குட்டி
- மயூரன்

கொப்பாட்டப்பிள்ளைகள் - அபிலாஸ் (சுவிஸ்)
- கௌசிகா
- வீதுஜன்
- ஐஸ்வினி (சுவிஸ்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மலர்க்கும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

- எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
- எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
- எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
- உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?
- எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
- எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு.
- எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
- எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
- எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொவருடையதாகிறது.
- மற்றொரு நாள் அது வேறொருவருடைதாகும்.
- இந்த மாற்றம் உலக நியதியாகும்.

SIVARANJANAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஜானன் பன்முகசேவை அல்லாரை வீதி, மீசாலை.